# DAC மதிப்பாய்வு நியதிகள்

## நிலைபேறுதன்மை

*(Sustainability)*

பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் பிரஜைகளுக்கான அதி செயற்திறன் மிக்க உறுப்பினராக இருப்பதற்கு ஆர்வம் கொண்டுள்ளீர்களா?

பாராளுமன்ற விவாதங்களின்போது உங்களது தொகுதியை பிரதிநிதித்துவம் செய்து சரியான கேள்விகளை எழுப்புவதன் ஊடாக நாட்டின் அபிவிருத்தியை உச்சமடையச் செய்வதற்கு ஆர்வங் கொண்டுள்ளீர்களா?

அப்படியாயின் பொருளாதார ஒத்துழைப்புக்கான அபிவிருத்தி நிறுவனம்/அபிவிருத்தி உதவிக்கான குழு (OECD/DAC) ஏற்றுக்கொண்ட மதிப்பாய்வு நியதிகள் அடங்கிய இந்த கையேட்டுத் தொடரினை வாசிப்பது பிரயோசனமாகும்.

**மதிப்பாய்வுக்கான ஆசிய பசுபிக் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமையம்**

## அறிமுகம்

பாராளுமன்றத்திற்குள்ள அதிகாரங்களின் ஊடாக மக்களை பிரதிநிதித்துவம் செய்தல், சட்டவாக்கம், அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல் போன்ற அபிவிருத்தி செயன்முறையில் முக்கிய பாத்திரம் ஒன்றை வகிக்க முடியும். ஆனாலும் அரசாங்கத்தின் கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் வலுவாகவும் சரியாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டதா? என்பதையும், மக்களின் வாழ்க்கையில் அவை விருத்தியை ஏற்படுத்தியதா என்பதையும் எவ்வாறு உறுதி செய்ய முடியும்? அவை சிறந்த கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களா? என்பதை எவ்வாறு உறுதி செய்ய முடியும்?

மதிப்பாய்வின் மூலமான ஆதாரங்களைக் கொண்டு விமர்சன பூர்வமான சிந்தனைகள் ஊடாக திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வடிவமைப்பதில், செயற்படுத்துவதில், கலாசாரம் ஒன்றை வளர்த்தெடுப்பதில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகமானது சிறந்த தலைமைத்துவத்துடன் நியாாயமான, நிலைபேறான அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதாகவும் அமையும்.

அபிவிருத்தி இடையீடுகள் (Intervention) தொடர்பிலான தெளிவான புரிதலுடன் பாராளுமன்ற விவாதாங்களிலும் துறைசார் குழு அறைக் கலந்துரையாடல்களிலும் சரியான கேள்விகளை முன்வைப்பதன் மூலம் பிரஜைகளுக்கான உச்சப்பயன் கிடைப்பதை உறுதி செய்யலாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதங்களின்போது சரியான கேள்விகளை மதிப்பாய்வு ஆதாரங்கள் ஊடாக முன்வைப்பதற்கு அவசியமான அடிப்படைகளை OECD/ DAC மதிப்பாய்வு நியதிகள் வழங்குகின்றன.

## நிலைபேறுதன்மை (Sustainability)

இடையீடுகளின் ஊடாக எழும் பயன்கள் எத்தனை காலத்துக்கு நிலைக்கும் என்பதாகவே OECD /DAC நிலைபேறுதன்மை (Sustainability) வரைவிலக்கணம் செய்கிறது. இடையீட்டின் ஊடாக பெறப்பட்ட அல்லது எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு அல்லது பயனானது இடையீட்டுக் காலம் முடிவடைந்த பின்னர் என்பதை அளவிடப் பொருத்தமான நியதியாக OECD /DAC நிலைபேறுதன்மை (Sustainability) வரைவிலக்கணம் செய்கிறது.

கொள்கையின், நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி,சமூக, பொருளதார, சூழலியல் மற்றும் நிறுவனமயத் தகுதிகள் போன்றனவற்றை மீளாய்வு செய்து பரீட்சித்துப் பார்ப்பதன் ஊடாக குறித்த இடையீடானது எத்தனைக் காலத்துக்கு நிலைத்திருக்கும் என்பதை அளவிட முடியும்.

குறித்த இடையீட்டின் தாங்குதிறன், இடர்நிலை மற்றும் முடிவுறுநிலை என்பவற்றை ஆய்வு செய்வதாக இது அமையும். மதிப்பாய்வு செய்யும் நேர காலத்தைப் பொறுத்து இடையீட்டின் மூலமான பெறுபேறுகளின் உண்மையான பாய்ச்சலையும் அல்லது எதிர்பார்க்கப்பட்ட பாய்ச்சலையும் அது குறுங்காலத்தில் அல்லது நீண்டகாலத்தில் நிலைபேறான தன்மையைக் கொண்டு தொடர்வதை அளவிடுவதாக இது அமையும்.

## மதிப்பாய்வு நியதிகள்

### பொருத்தப்பாடு (Relevance)

இடையீடு சரியானைதைச் செய்கிறதா?

### இணக்கப்பாடு (Coherence)

இடையீடு எந்தளவுதூரம் இணக்கமாகவுள்ளது?

### செயற்திறன் (Effectiveness)

இடையீடு அதன் நோக்கங்களை அடைகின்றதா?

### வினைத்திறன் (Efficiency)

வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன?

### தாக்கம் (Impact)

இடையீடு எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியது?

### நிலைபேறானதன்மை (Sustainability)

இறுதிவரையான பயனாற்றுகை அடையப்பெறுகின்றதா?

## மதிப்பாய்வின் நிலைபேறானதன்மை (Sustainability) நியதியை பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு பயன்படுத்தலாம்?

நாட்டு பிரஜைகளுக்கு அவசியமான நீண்டகால தேவைகளை நிறைவேற்றும் வகையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், இடையீடுகளுக்கு அவசியமான பொது நிதி ஒதுக்கீடுகளை பாராளுமன்றமே அங்கீகரித்து அனுமதிக்கின்றது. அத்தகைய ஒதுக்கீடுகளானவை உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, சூழல் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் போன்றவற்றுக்கானதாக அமைகின்றன.

உட்கட்டமைப்பு அபிவிருத்தி எனும்போது அவை அதிகம் முதலீடுகளை உள்வாங்குவதாக அமைகிறது. அத்தகைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் நீண்டகால தீர்வை நோக்கியதா அல்லது குறுங்கால தீர்வுகளை வழங்குவதா? உதாரணமாக, போக்குவரத்து வசதிகளுக்காக அமைக்கப்படும் வீதியானது இன்றைய தேவைகளுக்கானதாக மாத்திரம் அல்லாமல் அடுத்து வரும் பல ஆண்டுகளுக்கான திட்டமாக இருத்தல் வேண்டும். அதன் பிரதிபயன்கள் நிலைபேறானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் தொடர்ச்சியாக அதனை பராமரிக்கும் பொறிமுறை மற்றும் செலவுத்திட்டமிடல் அவசியமாகிறது.

சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களை எடுத்துக்கொண்டால் அவை பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உதவுகின்ற வகையில் அவர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தவல்லன. அத்தகைய நடத்தை மாற்றங்கள் தற்காலிகமானவையானதாக அன்றி நிரந்தரமானவையாக அமைதல் வேண்டும். உதாரணமாக குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டுவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை தாய்மார்களிடத்தில் முன்னெடுக்கும்போது அவை தொடர்ச்சியாக எதிர்காலத்தில் குழந்தைகளுக்கு போஷாக்கான உணவினை குழந்தைகளுக்குத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொடுக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதாக இருத்தல் வேண்டும். மாறாக குறித்த பிரச்சார நிகழ்ச்சித் திட்டம் இடம்பெறும்போது மட்டும் அவர்கள் அதைப்பற்றி சிந்திப்பதாக இருக்கக் கூடாது.

நிலைபேறான தன்மையை அடைவதற்கு குறித்த நிகழ்ச்சித் திட்டத்துடன் சம்பந்தப்படும் அனைவரினது மனநோக்கிலும் நடத்தையிலும் நிரந்தரமான மாற்றம் ஏற்படுவதை அடிக்கடி உறுதி செய்துகொள்ள வேண்டும். அத்துடன் அடைய நினைக்கும் அத்தகைய அபிவிருத்தி மாற்றங்களை ஏற்படுத்த முனையும் பிரதான நிறுவனங்கள் மற்றும் முறைமைகளின் கொள்திறன் விருத்தியிலும் அக்கறை காட்டுதல் வேண்டும். ஒரு நிகழ்ச்சித்திட்டத்தின் வாழ்நாள் நிலைபேறு தன்மையை அளவிடுவது இலகுவான காரியமல்ல என்பது யதார்த்தமானதே. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அல்லது கொள்கை அமுல்படுத்தலின் நீண்ட நாட்களின் பின்னரே நிலைபேறு தன்மையின் உண்மையான அளவீட்டைச் செய்வது சாத்தியமாகும்.

மதிப்பாய்வின் நிலைபேறானதன்மை நியதியைச் சரியாகப் புரிந்துகொள்வதன் மூலம், பாராளுமன்ற அவையிலும் குழு அறையிலும் பொருத்தமான கேள்விகளை எழுப்ப முடியும். இதன் மூலம் பிரஜைகளின் நலனை நோக்கி அரசாங்கம் ஒதுக்கீடு செய்யும் நிதியீட்டங்கள் குறித்த பாராளுமன்ற காலத்துக்கு மாத்திரமா அல்லது அதனையும் தாண்டிய காலத்துக்கு அவை பயன்தருமா என்பதை அறிய முடியும்.

நிலைபேறான தன்மையை இலக்காகக் கொள்ளாத அபிவிருத்தித் திட்டங்கள் நோக்கி ஒதுக்கப்படும் வளங்கள் வீண்விரயமாவதுடன் எதிர்காலத்தில் இதே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மீண்டும் வளங்களை ஒதுக்கீடு செய்ய நேரும். எனவே செயற்திட்டம் மீதான செயற்திறன் மிக்க கண்காணிப்புப் பணிகள் எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சிறந்த படிப்பினைகளைத் தரும்.

## மதிப்பாய்வின் நிலைபேறானதன்மை (Sustainability) நியதியை உறுதி செய்யும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பக்கூடிய சாத்தியமான கேள்விகள்?

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அல்லது செயற்திட்டம் அல்லது கொள்கைகளின் நிலைபேறான தன்மையை உறுதி செய்யும் வகையில் எழுப்பக்கூடிய கேள்விகளுக்கு பின்வருவனவற்றை உதாரணமாகக் கொள்ளலாம். ஆனாலும் இத்தகைய கேள்விகளை எழுப்பும்போது, அத்தகைய கொள்கை, இடையீட்டின் தன்மையையும் அது முன்னெடுக்கப்படும் நாட்டின் பின்னணியையும் கருத்திற்கொண்டு விவாதத்துக்கு அவசியமான விதத்தில் கேள்விகளை எழுப்புவது முக்கியமாகும்.

**அ:** அபிவிருத்தி இடையீட்டின் மூலம் ஏற்படும் சமூக, பொருளாதார, நிதி, சூழலியல் நிகர பலாபலன்கள் என்ன?

**ஆ:** அபிவிருத்தி இடையீட்டின் நிகர பலாபலன்களின் நிலைபேறு தன்மையை பேணுவதற்கு குறித்த நிறுவனம் அல்லது முறைமையின் கொள்திறன் என்ன?

**இ:** மனநோக்கிலும் நடத்தையிலும் முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தவதற்கு நிகர பலாபலன்கள் நிரந்தரமானதாக அமைய வேண்டுமா? அப்படியாயின் இதனை பிரதிபலிக்க வேண்டிய தரப்பு எது?

**ஈ:** நீண்டகால குறுங்கால அடிப்படையில் பலாபலன்களின் தொடர்ச்சித் தன்மைக்கு உதவ உறுதி செய்யும் காரணிகள் எவை?

**உ:** சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப கொள்திறன் மற்றும் முறைமையின் தாங்குதிறன்கள் எவ்வாறாக உள்ளன?

**ஊ:** குறித்த நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படுவதனால் ஏற்படும் இழப்புகள் என்ன? அதனால் பிரதிபலன்களில் ஏற்படும் மாற்றங்கள் என்ன?

---

*Source: De Silva,S.(2021).Theory of Change For Development Success: Workbook. Colombo, Sri Lanka: Sri Lanka Evaluation Association*

## நிலைபேறானதன்மை (Sustainability) தொடர்பிலான வேறு வள மூலங்கள்


BetterEvaluation(17July2018). OECD-DAC.Retrieved from *https://tinyurl.com/4j2ufa2z*

OECD(2022). Understanding the six criteria: Definitions, elements for analysis and key challenges. Retrieved from *https://tinyurl.com/bddeffx8*



**வெளியீடு**

ASIA PACIFIC PARLIAMENTARIANS FORUM FOR EVALUATION

APEA Asia-Pacific Evaluation Association

Global Parliamentarians Forum for Evaluation

தொடர்புகளுக்கு: apea.coordinator@gmail.com

**தமிழாக்கத்திற்கான அனுசரணை**

SLEvA

Sri Lanka Evaluation Association

தொடர்புகளுக்கு: sleva.sec@gmail.com